பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: ஆவணி 21 (6—9—72) புதன் வெளியூர்: ஆவணி 22 (7—9—72) வியாழன் [இதழ்: 71

வ.உ.சி. குடும்பத்துக்கு உதவி--கலைஞர் உறுதி

செய்தியாளர்:—"வ. உ. சி. குடும்பத்தினர், தங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்களே -- அவர்களுக்கும் பென்ஷன் தரும் முயற்சி எதையும் அரசு செய்யுமா?"

முதல்வர்:—"என்னுடைய கவனத்துக்கு அது மற்றிக் கொண்டு வரப்படுமானால் -- வ. உ. சி.-க்குப் பல வகைகளிலும் பெருமை சேர்க்கக் கடமைப்பட்ட இந்த அரசு -- அவருடைய குடும்பத்தின் துன்பங்களை நீக்கத் தவறாது!"

சென்னையின் இதயபாகத்துக்கு வ. உ. சி. பெயர்

★

தூத்துக்குடி சிலை திறப்பு விழாவில் முதல்வர் கலைஞர் அறிவிப்பு

தூத்துக்குடி, செப். 6—

'சென்னையின் இதயபாகம்' எனத் திகழும் ஜார்ஜ் டவுன் பகுதிக்கு வ. உ. சிதம்பரனாரின் பெயர் சூட்டப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் அறிவித்தார்.

அவர் இதனை அறிவித்தபோது வ. உ. சி. சிலைத் திறப்பு விழாவில் கூடியிருந்த பல்லாயிரம் மக்களும் கையொலி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

இந்த ஜார்ஜ் டவுன் பகுதிதான் சென்னையிலேயே மிகவும் சுறுசுறுப்பான வணிகக் கோட்டமாகும்; பெரிய பெரிய அலுவலகங்களும்--சைனா பஜார் என்னும் கடைவீதியும் இங்குதான் உள்ளன; சென்னைத் துறைமுகப் பகுதியும் இங்கேயே உள்ளது; சென்னைத் துறைமுக வாயிலில் ஏற்கனவே (உலகத் தமிழ் மாநாட்டின்போது) கழக அரசின் முயற்சியினால் வ. உ. சி. முழு உருவச் சிலை நிறுவப்பட்டிருப்பது நினைவுகூரத்தக்கது.

ஒரு காலத்தில் வெள்ளையர்களால் 'கருப்பர் நகர்' (பிளாக் டவுன்) என்று அழைக்கப்பட்ட இப்பகுதிக்கு ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் வருகை புரிந்தபோது, 'ஜார்ஜ் டவுன்' என்று பெயர் சூட்டப்பட்டது.

காங்கிரசு ஆட்சிக்காலத்திலேயே இப்பகுதிக்கு வ.உ.சி. நகர் என்று பெயர் சூட்டுமாறு கோரிக்கைகள் எழுப்பப்பட்டன; ஆனால் அந்தக் கோரிக்கைகளைக் காங்கிரசு ஆட்சியினர் பொருட்படுத்தவில்லை.

இப்போது, கழக ஆட்சிக் காலத்தில் எவ்விதக் கோரிக்கையும் இல்லாமல் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தாமே விரும்பி இப்பெயரைச் சூட்ட முன்வந்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

'சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுக'

நாலரைக்கோடி தமிழ்மக்கள் சார்பில் தலைமையமைச்சரிடம் கோரிக்கை

தூத்துக்குடி, செப். 6—

"வ. உ. சி. சிலையினைத் திறந்து வைத்திட நமது தலைமையமைச்சர் வந்த இடத்தில், கோரிக்கைகள் வைத்திடுவது நியாயமானதல்ல என்றாலும், அப்படிக் கோரிக்கை வைத்தால், ஓகோ -- இதற்காகத்தான் நம்மை அழைத்தார்கள் போலும்' என்று எண்ணிப் 'பல்வேறு மாநிலங்களுக்கும் பலம் சேர்க்கவேண்டாமா' என்று கேள்விகளைத் தொடுத்தாலும் -- அப்படியெல்லாம் எண்ணமாட்டார்-சொல்லமாட்டார் என்று கருதுகிறேன் -- எதையும் சொல்லவேண்டிய இடத்தில் சொல்லவேண்டியவைகளைச் சொன்னால் அது நடக்கும் என்பதால் -- அவர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன் --

நீண்ட காலமாக நமது கவனத்தில் இருப்பதும், நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்கவும் வாணிபத்தை வளர்க்கவும் பயன்படக்கூடியதுமான சேது சமுத்திரத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று நாலரைக்கோடித் தமிழ்மக்கள் சார்பில் தலைமையமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்."

--முதலமைச்சர் கலைஞர்
(வ. உ. சி. சிலைத் திறப்பு விழாவில்)

தூத்துக்குடித் துறைமுகத்தின் ஒரு பகுதிக்கு வ. உ. சி. பெயர்

தலைமையமைச்சர் இந்திரா அறிவிப்பு

சிதம்பரனார் சிலையைத் திறந்துவைத்து உரை

தூத்துக்குடி, செப். 5—

"தூத்துக்குடித் துறைமுகத்தின் ஒரு பகுதிக்கு வ. உ. சிதம்பரனாரின் பெயர் சூட்டப்படும்"

என்று, தலைமையமைச்சர் இந்திரா காந்தி, வ. உ. சி. சிலையைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்; அவர் பேசியதாவது:—

"தமிழகத் தவப்புதல்வர்களில் ஒருவர் வ. உ. சிதம்பரனார்; அவருக்கு அஞ்சலி செலுத்துவதிலே நான் மிகுந்த பெருமையடைகிறேன்.

அவரது தியாகத்திற்கு அஞ்சலி செலுத்தும் அதே நேரத்தில், இந்திய விடுதலைக்காக அரும்பாடுபட்ட தமிழகத் தியாகிகள் அனைவருக்கும் நான் அஞ்சலி செலுத்துகிறேன்.

நமது நாட்டிலும் சரி -- வெளிநாடுகளிலும் சரி -- நமது வீரர்களின் ஆற்றல் போற்றற்குரியதாகும்; சிதம்பரனார் ஆற்றல் புகழ் பெற்றிராவிட்டாலும், புகழ்மிக்க வரலாற்றை தோற்றுவித்திருக்கின்றன; அவைகள் எல்லாம் இன்றைக்குப் பலராலும் பாராட்டப்படுகின்றன; அவரது தியாகங்கள் போற்றப்படுகின்றன.

19-ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில், தமிழகம் உட்பட தென் மாநிலங்கள் இந்தியத் தேசிய விடுதலைப் போரில் மகத்தான பங்கையும் பொறுப்பையும் ஆற்றியுள்ளன.

தமிழகத்திலும் மற்றப் பகுதிகளிலும் தொடக்கக் கட்டத்தில், மிதவாதிகள்தான் செல்வாக்கு பெற்றிருந்தார்கள்; அந்தக் காலக் கட்டத்திற்குப் பிறகு தீவிரவாதிகள் தலைவர்கள் ஆனார்கள்; அதிலே ஒருவர்தான் வ. உ. சிதம்பரனார் ஆவார்.

தீவிரவாதிகள், மக்கள் உணர்வினை எல்லாம் ஒருமுனைப்படுத்தி செயல்படுத்த விரும்பினார்கள்; அவர்களின் கோரிக்கைகள் என்னவென்றால், 'சுயராஜ்யம் -- சுதேசி இயக்கம்' என்பதாகும்.

இவற்றின் மூலமாக அயல்நாட்டு வாணிபப் பொருள்கள் இங்கே வந்து குவியாமல், நம் நாட்டுக்கு வேண்டிய பொருள்களை இங்கேயே உற்பத்தி செய்ய முனைந்தார்கள்.

இந்த அடிப்படையில்தான் வ. உ. சிதம்பரனார் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் துவங்கினார்; ஜாம்ஷெட்பூரில் டாட்டா இரும்பாலையைத் துவக்கினார்.

விரைவில் இந்தத் தூத்துக்குடித் துறைமுகத்தின் அருகில் நடைபெறும் வேலை முடிந்துவிடும்; அதற்குப் பிறகு சிறிது காலத்திற்குள் முதல் கப்பல் வந்து நிற்கும் இடம் கட்டி முடிக்கப்பட்டுவிடும்; அந்த இடத்திற்கு வ. உ. சி.-யின் பெயர் வைக்கப்படும்."

தூத்துக்குடியில் வ.உ.சி. சிலை

முதலமைச்சர் கலைஞர் தலைமையில் இந்திரா காந்தி திறந்தார்

தூத்துக்குடி, செப். 5—

கப்பலோட்டிய தமிழர் -- தியாகச் செம்மல் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் நூற்றாண்டு விழாவையொட்டி, அவர் வாழ்ந்த தூத்துக்குடியில் முழு உருவச் சிலை திறந்துவைக்கப்பட்டது.

முதலமைச்சர் கலைஞர் தலைமையில் இந்தச் சிலைத் திறப்பு விழா இன்று மாலை 7 மணிக்கு நடைபெற்றது; இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி வ. உ. சி. சிலையைத் திறந்து வைத்தார்.

விழாவில் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினர்,

வ. உ. சி. உருவச் சிலையை வடித்துக் கொடுத்த சிற்பி வெங்கடேசனுக்குத் தலைமையமைச்சர் பொன்னாடை போர்த்தினர்.

கல்வித்துறைச் செயலாளர் திரு. கே. திரவியம், தலைமையமைச்சரின் பேச்சை மொழி பெயர்த்தார்.

ஒலிம்பிக் விளையாட்டுகள் ஒத்திவைப்பு

அராபியக் 'கொரில்லா'க்களினால் ஏற்பட்ட விபரீத விளைவு

மூனிச்சில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள், நேற்று அராபிய கொரில்லாக்கள் திடீரென, இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களைச் சுட்டுக் கொன்றதன் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

இந்தக் கொரில்லாக்கள் போட்டி நடைபெறும் ஒலிம்பிக் கிராமத்திற்குள் கள்ளத்தனமாக நுழைந்து இரண்டு இஸ்ரேலிய அதிகாரிகளையும், ஒரு விளையாட்டு வீரரையும் சுட்டுக் கொன்றனர்.

இந்தக் கொரில்லாக்கள், இஸ்ரேலில் சிறைப்பட்டிருக்கும் 200 கொரில்லாக்களை விடுதலை செய்ய வேண்டுமென்றுகோரி, அங்கிருந்த 24 விளையாட்டு வீரர்களைப் பிடித்து வைத்துக் கொண்டனர்.

இவர்களை சமரசப்படுத்தி, இஸ்ரேலியர்களை விடுவிக்க மேற்கு ஜெர்மன் அரசுத் தரப்பில் செய்யப்பட்ட முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போயின.

இந்த நிகழ்ச்சி, உலகெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. பல நாட்டு அரசுகளும் கொரில்லாக்களின் இந்தக் காட்டுமிராண்டிச் செயலைக் கண்டித்துள்ளன.

வ. உ. சி. கண்ட கனவு நனவாகி வருகிறது

அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் இந்திரா காந்தி பெருமிதம்

தூத்துக்குடி, செப். 6—

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டிச் சிறப்பு அஞ்சல் தலை வெளியீட்டு விழா, வ. உ. சி. கல்லூரி கலை அரங்கில் நேற்று மாலை 5-மணியளவில் நடைபெற்றது.

விழாவிற்கு வருகை தந்தவர்களைத் திரு. எஸ். ஏ. முருகானந்தம் எம்.பி. வரவேற்று உரையாற்றினார்.

வ. உ. சி. அஞ்சல் தலையைத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி வெளியிட்டார்.

வ. உ. சி. நினைவு அஞ்சல் தலைத் தொகுப்பு ஒன்றினைத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி, முத

(4-ம் பக்கம் பார்க்க)

மண் குடிசை வாசிகட்கு மாளிகை வாசம்

ஏழை எளிய மக்கட்கு ஏற்றமிகு வாழ்வு

தமிழக அரசின் மகத்தான திட்டம்-- இந்தியாவுக்கே முன்மாதிரி

மத்திய அரசு ஏட்டின் மனந்திறந்த பாராட்டு

சென்னை, செப். 5—

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழ்நாட்டில் சேரி ஒழிப்புத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டு வருவதை மனம் விட்டுப் பாராட்டியிருக்கிறது--மத்திய அரசின் வெளியீடான 'திட்டம்' (யோஜனா) என்ற இதழ்.

மண் குடிசைகளை மாளிகைகளாக மாற்றி ஏழை எளிய மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் தமிழக அரசின் திட்டங்களை எடுத்துக் காட்டி 'திட்டம்' (15-7-72) இதழில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரை வருமாறு:--

தென் சென்னையில் கோட்டூர்புரத்தில் ரூ. 138 இலட்சம் செலவில் தமிழகக் குடிசை மாற்று வாரியம் கட்டி முடித்த அடுக்கு மாடிக் குடியிருப்பை 1972 ஜூன் 11-ந் தேதி சர்வோதய இயக்கத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் திறந்துவைத்த நிகழ்ச்சி, நாடெங்கிலும் உள்ள ஒரு பெரிய பிரச்சினையை--முக்கியமான நகரங்களைப் பாதிக்கும் பிரச்சினையை எல்லோர் கவனத்துக்கும் கொண்டுவந்தது.

ஏழை மக்கள் வசதியில்லாத குடிசைகளிலும்--கொட்டகைகளிலும் தங்கி, சேரிகள் பெருகி வருகின்ற நிலைமைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டிய ஒரு பிரச்சினையாகிவிட்டது; இது குடிசை வாழ்வோரைத் துன்பத்தில் ஆழ்த்துகின்ற ஒன்று மட்டுமல்ல--பொதுவாக நகரத்தில் வாழும் அனைவரும் அக்கறை கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

நகரங்களில் தொழில்கள் பெருகி--வேலை வாய்ப்புக்கள் அதிகரித்து--வாழ்க்கை வசதிகள் நிறைந்திருப்பதால், கிராமங்களில் உள்ளவர்களும் நகரங்களை நாடி வந்து குவிகின்றனர்; ஏற்கனவே இட நெருக்கடி அதிகமுள்ள நகரங்களில் அவர்களுக்கு ஏற்ற வீடுகள் கிடைப்பது அருமை; எனவே, கண்ட கண்ட இடங்களில்--எங்கெங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் அவர்கள் கொட்டகை போட்டும்--கூடாரமடித்தும்--குடிசைகள் கட்டியும் வசிக்கிறார்கள்.

மக்களாக--சௌகரிய வசதிகளோடு அவர்களால் வாழ முடிவதில்லை; குழந்தை குட்டிகள்--கோழி--ஆடுகள்--பெட்டி பாய் படுக்கை--சட்டிப் பானைகள்--அடுப்பு--குமிட்டி எல்லாம் ஒரே இடத்தில் குவிந்து, குடிதண்ணீர் வசதியோ--கழிவிட வசதியோ--குளிப்பு வசதியோ ஏதுமில்லாத நிலையில் ஏராளமான பேர் ஒண்டி வாழ்கிறார்கள்!

இந்த ஏழை மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கச் சமுதாயமும்--அரசும் கடமைப்பட்டிருக்கிறது; இக்கடமையை நிறைவேற்றும் வகையில், தமிழக அரசு இந்தியாவிலேயே முதன்முதலாகக் குடிசை மாற்று வாரியம் ஒன்றைச் சட்டபூர்வ நிறுவனமாக 1970 செப்டம்பரில் அமைத்தது; அதற்கு 1971-ம் ஆண்டு தமிழ்நாடு சேரிப் பகுதிகள் (அபிவிருத்தி--சீர்திருத்தம்) பற்றிய சட்டப்படி ஏராளமான அதிகாரங்களும் தரப்பட்டுள்ளன; அதன் வேலைப் பொறுப்புக்கள் அதிகம்; சேரிகளை மாற்றுவதில்-குடியிருப்புக்களை அமைப்பதில் அது தீவிரக் கவனம் செலுத்துகிறது.

இந்த வாரியம் (போர்டு) முதல் வேலையாக நகரத்திலுள்ள சேரிகள் பற்றி விரிவாகவும், ஆழ்ந்த முறையிலும் பரிசீலனை நடத்தித் தகவல் திரட்டியது; அப்படி நடந்த சமூக--பொருளாதாரப் பரிசீலனையின்படி, சென்னை நகரில் 1,202 சேரிகள் உள்ளன என்று தெரியவந்தது; அவைகளில் ஒன்பது இலட்சம் பேர் உள்ளனர்; மொத்த நகர மக்கள் 27 இலட்சத்தில் மூன்றிலொரு பங்கினர் இங்கே வசிக்கின்றனர்.

மற்றொரு பரிசீலனை பிறகு நடத்தப்பட்டு '1,041 சேரிகள் உள்ளன என்று கணக்கிடப்பட்டது; அவைகளில் 820 சேரிகள் பற்றி ஆழ்ந்த சமூக--பொருளாதாரப் பரிசீலனை நடத்தி முடிக்கப்பட்டது; இவைகளில் மூன்று சேரிகள் ஒவ்வொன்றிலும், 1,000 குடும்பங்கள் உள்ள மிகப் பெரியவை; 500—1,000 குடும்பங்கள் உள்ள சேரிகள் : 324; இவைகளில் உள்ளவர்களுக்கு நல்ல குடியிருப்பு வசதி தர 1.80 இலட்சம் குடியிருப்புக்கள் தேவை என்று மதிப்பிடப்பட்டது.

1972 மார்ச் முடிய இந்த வாரியம் நகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள 18 சேரிப் பகுதிகளை அபிவிருத்திக்கு நிர்ணயித்து--8,666 குடியிருப்புக்கள் கட்டத் திட்டமிட்டு--2,560 குடியிருப்புக்களைக் கட்டி முடித்துள்ளது. 18 மாதத்துக்குள் இவ்வளவு முடித்திருப்பது ஒரு நல்ல சாதனை; 1971—72-க்கு ஒதுக்கப்பட்ட நான்கு கோடி ரூபாயும் முழுக்கப் பயன்படுத்தப்பட்டு விட்டது.

குடியிருப்புகள் மிக நன்றாய்த் திட்டமிடப்பட்டு--தேவைகள் அனைத்தும் பூர்த்தியான தன்னடக்கப் பிரிவுகளாக அவை கட்டப்பட்டுள்ளன; ஒரு குடியிருப்பில், வாழும் அறை ஒன்று--சமையல் அறை (இதில் சாமான்கள் வைக்க இட வசதி உண்டு)--குளிப்பறை--ஜலதாரைக் கக்கூசு ஆகியவை இருக்கின்றன.

ஒவ்வொரு குடியிருப்பிலும் குழாய்த் தண்ணீர் வசதி--மின்விளக்கு வசதி ஆகியவைகளுக்கெனத் தனி மீட்டர் உண்டு.

குடியிருப்பின் தரை பரப்பு 197—215 சதுர அடி; அதை கட்டும் செலவு சராசரி ரூ. 8,000; இதற்கு வாடகை--இதனைக் கட்டுவதற்கு ஏற்பட்ட செலவின் கணக்குப்படி--ரூ. 43 விதிக்க வேண்டும்; ஆனால், குடிபுகும் ஏழை மக்களிடம் வாடகையாக வசூலிப்பதோ ரூ. 15 மட்டும்தான்; மீதி ரூ. 28 மாநில அரசு உதவித் தொகையாக அளிக்கிறது.

ஒவ்வொரு குடியிருப்புக் காலனியிலும் நல்ல சாலை அமைப்பு--விளையாட்டு அரங்கு--ஒரு பள்ளிக்கூடம்--சமுதாய நிகழ்ச்சி மண்டபம்--பாலர் விடுதி--மருத்துவமனை--பூங்கா--அங்காடி ஆகியவை உள்ளன; கட்டடங்கள் மூன்று அல்லது நான்கு மாடிகளாகக் கட்டப்படுகின்றன.

விஞ்ஞானபூர்வமான செயல் திட்டப்படி வேலைகள் நடக்கின்றன; ஒரு பகுதி, 'சேரி' என்று அறிவிக்கப்பட்டவுடன், அங்கே சமூக--பொருளாதார பரிசீலனை நடத்தப்படும்; தகவல் குறிப்பவர்களும்--புகைப்படக்காரர்களும் அங்கே வந்து ஒவ்வொரு குடும்பம் சம்பந்தமாகவும் புள்ளிவிவரங்களைத் திரட்டுகிறார்கள்; ஒவ்வொரு குடும்பத்திலும் எத்தனை பேர் உள்ளனர்--யார், யார் உள்ளனர்--அவர்களின் வேலை--வருமானம் எவ்வளவு என்று தகவல் தரப்படுகின்றன.

ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு எண் குறிப்பிடப்படுகிறது; அங்குள்ள அனைவரையும் ஒருசேர வைத்துப் புகைப்படம் எடுக்கப்படுகிறது; எந்தக் குடும்பம் எந்த ஊரிலிருந்து வந்தது--அதனிடம் ஆடு, மாடு, கோழி வகையறா எத்தனை எத்தனை உள்ளன என்றெல்லாம் கண்டறியப்படுகிறது.

அவர்களுக்குக் குடியிருப்பு ஏற்படுத்துகையில், கால்நடைகளுக்குத் தொழுவம்--கொட்டில் ஆகியவை எவ்வளவு தேவை என்று கணிக்க இது உதவும்; அதனால், மீண்டும் சேரி நிலை ஏற்படாமல் தடுக்க முடியும்.

கட்டுமான வேலை தொடங்கும்போது, திட்டத்திலேயே குடியிருப்பு இலக்கங்கள் குறிக்கப்பட்டு--வாழ வருவோருக்கு இடம் குறிப்பிட்டு ஒதுக்கப்படுகிறது; யார் கீழ்ப் பகுதியில் இருப்பவர்கள்--யார் மாடியில் இருப்பவர்கள் என்றுகூடத் தீர்மானிக்கப்படுகிறது; பொதுவாக, 20--30 ஆண்டுகள் அப்பகுதியில் வசித்து வருபவர்களுக்குக் கீழ்ப் பகுதி தரப்படும்.

தேர்தல் வாக்குப் பட்டியலில் பெயர்கள் சரி பார்க்கப்படும்; கட்டட வேலை ஒழுங்காக நிறைவு பெறக் குறிப்பிட்டவர்களிடம் அவை ஒப்படைக்கப்படுகின்றன; இதனால் சில சமயங்களில்--பழைய சேரி வாழ்க்கை முறை ஒரு பக்கம் காட்சி அளிக்கும்; புதிய வாழ்க்கை முறை மற்றொரு பக்கம் தோற்றமளிக்கும்; ஆனால், வேலை நிறைவேறிக் கொண்டிருக்கும்.

குடியிருப்புக்கு வருகை தருவது ஒரு சுவையான அனுபவம்; குடியிருப்புப் பெற்று குடியேறி விட்டவர்கள் மகிழ்ச்சி ததும்ப வாழ்கின்றனர்; அறுபது வயதான மூதாட்டி ஒருவர், தம் முழுத் திருப்தியைத் தெரிவித்தார்; அவளும்--மகனும்--மருமகளும்--அவர்களின் ஆறு குழந்தைகளும் அந்த வீட்டில் வாழ்கிறார்கள்; மகன் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்; மாத வரும்படி ரூ 200; நானும் இரண்டாவது உலகப் போரின்போது நர்சு ஆக வேலை பார்த்ததாகவும், 20 ஆண்டுகள் இவ்வகையில் இருந்ததாகவும் கூறினார்; 'குடியிருப்பு அமைப்பில் ஒரு குறையும் இல்லை; எல்லாம் திருப்தி' என்று தெரிவித்தார்; ஆனால் சிலர், 'தண்ணீர் வசதி இன்னும் நல்லபடி அமையலாம்' என்று தெரிவித்தனர்.

இப்படியாக மண் குடிசைகள்--மாளிகைகளாக மாறி ஏழை மக்களின் வாழ்வை மலரச் செய்து மகிழ்ச்சியூட்டி வருகின்றன!

குடிசை மாற்று வாரியத்தின் பணி பாராட்டத்தக்கதே!

வேறு சில இடங்களில் வீட்டு வசதி வாரியம் வீடு கட்டும் வேலையைச் செய்து வருகிறது.

நகரங்களில் இப்படிக் குடியிருப்பு வசதி அமைவது போல், கிராமப் புறங்களிலும் ஏதாவது செய்வது நல்லது என்று தோன்றுகிறது; அதனால் அங்குள்ள மக்களுக்கு நல்வாழ்வு கிடைப்பதுடன், அவர்களுக்கு அங்கேயே வேலை வாய்ப்புக்களும் கிடைக்கும்.

சென்னை நகரச் சேரி ஒழிப்புத் திட்டம் ஏழாண்டுத் திட்டம்; கோவை--மதுரை--திருச்சி ஆகிய நகரங்களில் வீட்டு வசதி வாரியம் மூலம் இவ்வேலை நடந்து வருகிறது; அவை நல்ல முறையில் முன்னேற்றம் கண்டிருப்பதாகத் தெரியவருகிறது.''

கரூர் வட்ட கைத்தறி நெசவாளர் மாநாடு

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

31-8-72 அன்று கரூரில் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் எம்.எல்.சி. தலைமையில் நடைபெற்ற கரூர் வட்ட கைத்தறி நெசவாளர் சங்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:—

கரூர் வட்டம் மற்றும் சென்னிமலைப் பகுதியில் ஏறத்தாழ ஐம்பதாயிரம் ஆண்--பெண் தொழிலாளர்கள் 2/17, 2/20 ஆகியஇரட்டை முறுக்கு நூல் கொண்டு பெட்ஷீட்—படுக்கை விரிப்பு—துண்டு—தலையணை உரை — மேட்டை — கேஸ்மெண்ட் போன்ற ரகங்களை உற்பத்தி செய்யும் தொழிலையே நம்பியுள்ளனர்; இவ்வளவு பெரும் தொகையினர் ஈடுபட்டுள்ள இப்பெரிய தொழில், தமிழகத்தில் கைத்தறி நெசவுத் தொழில் குறிப்பிடத்தக்க சிறப்பான தன்மை வாய்ந்ததாகும்; இதற்கு வேலைப் பளு--வேலை முறைகள்--கூலி நிர்ணயம் போன்ற சட்ட ரீதியான பாதுகாப்புக் கிடையாது; தற்போதுள்ள அடிப்படையிலிருந்து தொழிலாளர்களுக்குச் சட்டப்பூர்வமான பாதுகாப்பு கிடைக்கத்தக்க வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்; அதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களையும், தமிழக அரசினையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

நெசவாளர்கட்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயக் குழு நியமித்தமைக்கு முதலமைச்சர் கலைஞர்—தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆகியோருக்கும், தமிழ்நாடு அரசுக்கும் இம்மாநாடு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

அரசு அமைக்கும் கூலி நிர்ணயக் குழுவின் முடிவுகள் தாமதமின்றியும்--எவ்விதப் பாகுபாடின்றி

(3-ம் பத்தி பார்க்க)

தொழில் வளர்ச்சியில் டில்லி காட்டும் அலட்சியம்

திருவள்ளூரில் புதிய தொழிற்பேட்டை அமைய வாய்ப்பு--அமைச்சர் செ. மாதவன் உறுதிமொழி

சென்னை, செப். 4—

திருவள்ளூரில் அமைக்கப்பட்டுள்ள 'இந்துஸ்தான் மோட்டார்ஸ் எர்த் எக்யூப்மெண்ட்' தொழிற்சாலையை தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் சுற்றிப் பார்த்தார்.

''தற்போது எழுபது சதவிகிதம் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படும் துணைப் பொருட்களுடன் முப்பது சதவிகிதம் வெளிநாட்டுத் துணைப் பொருட்களையும் சேர்த்து இணைக்கும் இந்தத் தொழிற்சாலைக்கு அருகில் திருச்சி திருவெறும்பூரில் உள்ளதைப் போன்ற தொழிற்பேட்டை நிறுவப்படலாம்; அப்படிச் செய்யப்பட்டு இந்தத் தொழிற்சாலை 200 சதவிகிதம் முதல் 260 சதவிகிதம் வரையிலான உற்பத்தியை எட்டும்போது ஏறத்தாழ எட்டாயிரம் பேர் வேலை வாய்ப்பும் பெறுவர்'' என்று அதுபோது அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

''அப்படியானால், துணைப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்பட்டறைகள் வைக்கின்றவர்களுக்கு 'சிட்கோ' மூலம் எல்லா உதவிகளையும் செய்ய அரசு முன்வரும்'' என்று அமைச்சர் தெரிவித்தார்.

அதற்கான ஒரு பொருட்காட்சியை விரைவில் அமைத்துத் தொழில் தொடங்க முன்வருவோருக்கு ஊக்குவிப்பும்--எழுச்சியும் ஏற்படுத்த இருப்பதாகவும் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

''தொழிற்பேட்டைகளுக்கான இடம்--தொழிற்சாலைக்கான வசதிகள் அனைத்தும் செய்துதர அரசு எப்போதுமே தயாராக இருக்கிறது'' என்று அமைச்சர் கருத்தறிவித்தார்.

இந்தத் தொழிற்சாலையைத் தொடங்கும்போதே இங்கு செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு, போலந்து--யுகோஸ்லேவியா நாடுகளிலிருந்து வரவேற்புக் கிடைத்திருப்பதாகவும், அதன் அந்நியச் செலவாணி மூன்றுகோடி ரூபாய் என்றும் நிர்வாகிகள் சார்பில் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

''இதற்கான மூலப்பொருட்களை வழங்குவதில் இந்திய அரசு மனமுவந்து ஒத்துழைக்குமானால் இன்னும் 5 ஆண்டுகளில் இந்தத் தொழிற்சாலை தன்னிறைவுடன் தொழில் வாய்ப்பினும் இலட்சிய எல்லையினை அடையும்'' என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்காகத் திட்டமிடப்பட்டு 11 மாதங்களில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன; ஆனால் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகுதான் இதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கியிருக்கிறது.

நாட்டுக்குத் தேவையான நல்ல கனவுகளைக் காணுவீர்!

கற்றதை மற்றவருக்கு பயன்படுத்தும் ஆற்றலைப் பெற முனைவீர்

பள்ளி மாணவர்களுக்கு கல்வியமைச்சர் நாவலர் அறிவுரை

''வகுப்பறைகளிலே ஆசிரியர்கள் கருத்துக்களைத்தான் எடுத்து வைப்பார்கள்--அவற்றைச் செவி வழி கேட்கத்தான் வகுப்பு அறை பயன்படும்; கேள்வி கேட்டால், கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லத்தான் வகுப்பு அறை பயன்படும்; ஆனால், உள்ளத்திலே ஊறிக் கிடக்கின்றவைகளை வெளியே எடுத்துச் சொல்லும் ஆற்றலைப் பெற வேண்டுமானால், இலக்கிய மன்றத்தைப் பள்ளிப் பருவத்திலேயே மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒருவனது உள்ளத்திலே ஊறி எழுகின்ற கருத்துக்களை இரண்டு வகைகளில் வெளிப்படுத்தவேண்டும்; ஒன்று--கருத்து வடிவிலாவது வரவேண்டும்; அல்லது எழுத்து வடிவிலாவது வரவேண்டும்; அது இல்லையெனில், யாருக்கும் எந்த விதப் பலனும் ஏற்படாது.

சிலபேர் நிறையப் படித்து இருப்பார்கள்; இன்னும் சிலபேர் பெரிய பெரிய படிப்புகள் எல்லாம் படித்துப் பட்டங்கள்கூடப் பெற்றிருப்பார்கள்; 'அவர்கள் படிக்காத நூல்களே இல்லை' என்றும் 'குறிப்பிடப்படாத கருத்துக்களே இல்லை' என்றும்கூடப் பெயர் பெற்றிருப்பார்கள்.

அகநானூறு--புறநானூறு--சிலப்பதிகாரம்--சீவக சிந்தாமணி--கம்ப இராமாயணம்--கந்தபுராணம்--தேவாரம்--திருவாசகம்--திருக்குறள்--திருவருட்பா போன்ற நூல்களை எல்லாம் படித்துக் கரைத்துக் குடித்திருப்பார்கள்; ஆனால் அவர்களுக்குப் பேச மட்டும் வராது என்று சொன்னால், மேலே சொன்ன இலக்கியங்களை எல்லாம் படித்திருந்து என்ன பயன்?

சொல்லப் போனால், பீரோவுக்கும்--இவர்களுக்கும் உள்ள வேறுதான் என்ன? பீரோ நகராமல் இருந்த இடத்திலேயே இருக்கும்; பீரோ சோறு கேட்காது; ஆனால் இவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர முடியும்; இவர்களுடைய வயிறு வேளைக்கு வேளை சோறு கேட்கும்--அவ்வளவுதான்.

உள்ளத்திலே உள்ள கருத்துக்களைச் செயல் வடிவில் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும்; இதனை வள்ளுவர் அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்; 'நாநலம் என்னும் நலன் உடைமை அந்நலம்--யாநலத்து உள்ளதூஉம் அன்று' என்றார்: அதாவது, 'ஒருவன் நாக்கு நலத்தை மட்டும் பெற்றுவிட்டால், மற்றைய நலன்கள் அதற்குள் அடங்கிவிடும்' என்றார்.

வள்ளுவர் இன்னொன்றும் குறிப்பிட்டிருக்கிறார்; 'விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது--சொல்லுதல் வல்லார்ப்பெறின்' என்று குறிப்பிட்டிருக்கிறார்; அதாவது, 'கருத்துக்களைத் தொகுத்து--வகுத்து--ஒழுங்காக அடுக்கிச் சொல்லக்கூடிய சொல்லாற்றல் ஒருவனிடத்தில் இருந்தால், அவனுடைய சுட்டுவிரலின்கீழ் இந்த உலகம் ஓடிவந்து நிற்கும்' என்றார்.

'சித்திரமும் கைப்பழக்கம்--செந்தமிழும் நாப்பழக்கம்' என்று ஔவையார் குறிப்பிட்டார்; 'பழகப் பழகத்தான் சொல் வன்மையும்--ஓவியமும் கூட வரும்; இவைகள் எல்லாம் திடீரென்று ஒரு நாளில் வந்துவிடாது; இராஜா ரவிவர்மாவின் ஓவியம் முதலில் எடுபடவே இல்லை; பிறகுதான் அது வளர்ந்தது.

நீங்கள் எந்தத் துறைக்குப் போவதாக இருந்தாலும்--அதாவது டாக்டராகப் போவதாக இருந்தாலும்--எஞ்சினியராகப் போவதாக இருந்தாலும்--வழக்கறிஞராகப் போவதாக இருந்தாலும்--தரகு வியாபாரம் செய்வதாக இருந்தாலும்--மண்டிக்கடை வைப்பதாக இருந்தாலும்--சட்டமன்றத்திற்குச் செல்வதாக இருந்தாலும்--ஐ. நா. சபையில் வாதாடச் செல்வதாக இருந்தாலும்--அல்லது வேறு எந்தத் துறைக்குச் செல்வதாக இருந்தாலும்--சொல்வன்மை மிகவும் அவசியம்.

சொல் வன்மை வந்த பிறகு அளவறிந்து பேசக் கற்றுக்கொள்ள முயலவேண்டும்; இதனையும் வள்ளுவர் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்; 'யாகாவாராயினும் நாகாக்க--காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு' என்றார்; அநேகம் பேர் இருக்கின்ற நலத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல், இருக்கின்றவற்றையும் இழக்கும் தருவாயில் இருக்கிறார்கள்; ஆகவே, வளர முடியாவிட்டாலும், இருக்கின்றவைகளைக் காப்பாற்றிக் கொள்ளவாவது முயல வேண்டும்.

அறிவால் அளந்து பார்ப்பது அறிவியல்--உணர்வால் உணர்ந்து பார்ப்பது கலை இயல்

கலைகளில் எல்லாம் மிகச் சிறந்த கலை--இலக்கியக் கலை; அதையும் இரண்டு வகையாகப் பிரிக்கிறார்கள்; ஒன்று--'சயின்ஸ்' என்கிறார்கள்; மற்றொன்று--'ஆர்ட்ஸ்' என்கிறார்கள்; 'அறிவால் அளந்து பார்ப்பது அறிவியல்' என்றும், 'உணர்வால் உணர்ந்து பார்ப்பது கலை இயல்' என்றும் சொல்லுகிறார்கள்.

கலை இயல்--பண்பாட்டை வளர்க்கப் பயன்படும்; அறிவியல்--விதவிதமான ஆலைகளையும் விமானங்களையும், கார்களையும் கண்டுபிடிக்கப் பயன்படும்.

'உள்ளத்தைச் செம்மைப்படுத்துவது எது' என்று கேட்டால், இலக்கியம்தான்; மிகச் சிறந்த கருத்துக்களைச் செவி ஈர்க்கத்தக்க அளவுக்கு இலக்கியம் பயன்படும்; உலகத்திலுள்ள பல நாட்டு இலக்கியங்களோடு நம்முடைய இலக்கியங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய இலக்கியங்கள் மற்றெல்லாவற்றையும்விட மிகச் சிறந்து விளங்குகின்றன' என்று சொன்னால், அது மிகையாகாது.

ஆங்கில இலக்கியங்கள் அனைத்தும் ஆயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்டவைதான்; 1500 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் ஆங்கிலத்தில் சிறந்த இலக்கியங்கள் இருந்தன என்று யாரும் சொல்ல முடியாது; சேக்ஸ்பியர்--ஷெல்லி--கோல்ட்ஸ்மித் போன்ற ஆங்கில ஆசிரியர்கள் எல்லாம் 500 அல்லது ஆயிரம் ஆண்டுக் காலத்திற்குள் வந்தவர்கள்தான்!

''ஆனால் நம்முடைய தமிழ் இலக்கியங்கள். 2000 ஆண்டுக் காலத்திற்கு முற்பட்டவை; மனித சமுதாயத்தில் உள்ள பண்புகள் என்னென்ன என்பவைகளைப் பற்றியும், துன்பத்தை நீக்கி இன்பத்தைப் பெற என்னென்ன வழியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் எடுத்துச் சொல்லும் ஆற்றல் இலக்கியத்தில்தான் உண்டு.

ஆகாத கனவால் யாருக்கு என்ன பயன்?

'வாழ்க்கையில் குறிக்கோள்' என்று ஒன்று ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்; அதாவது, மாணவர்கள் கனவுகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; அதுவும் பகற்கனவுதான் காணவேண்டும்,

அநேகம் பேர்--'பகற் கனவு காணக்கூடாது' என்று சொல்லுவார்கள்; சில பேர்--ஏழடுக்கு மாளிகையில் படுத்திருக்கின்ற மாதிரியும், இரண்டு பேர் வெண்சாமரம் வீசுவது மாதிரியும், கோபம் வருகின்ற மாதிரியும் கனவுகளைக் காண்பார்கள்; அந்தக் கனவு யாருக்கும் ஆகாத கனவு; ஆகவேதான், பகற் கனவு காண வேண்டுமென்று சொன்னேன்.

பண்புக்கு உறைவிடமாகத் திகழ்வது அவசியம்

சிறந்த எண்ணங்களை வெளியிடவும்--செம்மையான கருத்துக்களை உள்ளத்தில் ஏற்றிடவும் இலக்கிய மன்றத்தினை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

'தொட்டனைத்து ஊறும் மணற் கேணி--மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு' என்றார் வள்ளுவர்; அந்த அறிவைப் பெற மாணவர்கள் சிறந்த முறையில் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்,

'ஏறுபோல் நட' என்றார் பாரதியார்; அதைத் தவிர்த்து, எதற்கும் வளையாமல்--பணியாமல்--அக்கிரமத்திற்குப் பணியாமல்--உறுதியை நிலைநாட்டி நாம் வளர வேண்டுமென்ற எண்ணத்தில் ஈடுபட வேண்டும்.

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதற்கு இணங்க, அந்த சங்கநாதத்தைப் பாரெங்கும்--திக்கெட்டும் கேட்க--'அதை நிலைநாட்டுகின்ற துணிவு பெறவேண்டும்.

ஒவ்வொருவரும் அழுதுகொண்டேதான் பிறக்கிறார்கள்; ஆனால், இறக்கும்போது அழுதுகொண்டே மறையக் கூடாது; பெருமையோடு மறைய வேண்டும்.

'வாழுங்கள்--மற்றவர்களையும் வாழவிடுங்கள்' என்பதற்கிணங்க, சிறந்த பண்புக்கு உறைவிடமாக மாணவர்களை திகழவேண்டும்.

—(குறிஞ்சிப்பாடி உயர்நிலைப் பள்ளி இலக்கிய மன்றத் துவக்க விழாவில்)

திருச்சி வட்ட தி.மு.க. உறுப்பினர் கூட்ட முடிவுகள்

திருச்சி வட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம், அவைத் தலைவர் டி. என். வையாபுரி தலைமையில் திருச்சி டவுன் ஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

வட்டச் செயலாளர் மு. நடராசன் கூட்டத்தின் நோக்கம் பற்றி விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை விவசாயிகள் நாள்--தொழிலாளர் நாள்--மாணவர் இலக்கிய நாள் என்று மூன்று நாட்கள் வட்டக் கழகத்தின் சார்பில் முறையே பேட்டைவாய்த்தலை--திருவெறும்பூர்--திருவரங்கம்--சுப்பிரமணியபுரம் (டோல்கேட்) பகுதிகளில் சிறந்த முறையில் நடத்துவதென்றும், இவ்விழாக்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும் அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் காஞ்சி மணிமொழியார், நாமக்கல் கவிஞர், கொலையுண்ட பிரதாப் சந்திரன் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், 'விவசாயிகள் போராட்டம்' என்ற பெயரால் அராஜகத்தைத் தூண்டிவிட்டு மற்றவர்களது உயிரில் தங்களது அரசியல் கட்சியை வளர்த்துக் கொள்ளவும்--கழக அரசுக்குக் களங்கம் ஏற்படுத்தவும் தி. மு. கழக எதிர்ப்புச் சக்திகள் மேற்கொண்ட வன்முறைச் செயல்களைக் கண்டித்தும், உயிர்நீத்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் சௌத் மெட்ராஸ் எலெக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர், 'வேலைநிறுத்தம்' என்ற பெயரில் மக்களுக்கு இன்றியமையா குடிநீர் சப்ளை—மருத்துவமனை—தொழிலகங்கள் போன்றவைகளைக்கூட செயலற்றுப் போகும் நிலைக்கு உள்ளாக்கியிருப்பதைக் கண்டித்தும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக தக்க நடவடிக்கையை மேற்கொண்டு மின்வசதி உடனடியாகக் கிடைக்க ஆவனசெய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இரத்தப் புரட்சி இல்லாமலே ஏழை எளியவர்கட்கு வீடு

கழக ஆட்சி உருவாக்கும் அமைதிவழிப் புரட்சி

தஞ்சை மாவட்டத்தில் விரைவில் திட்டம் துவங்கும்--அமைச்சர் இராசாராம் தகவல்

தஞ்சை, செப். 5—

குடியிருப்புத் திட்டம்--வீட்டு மனை பட்டா வழங்குதல் ஆகியவைகளைப்பற்றி ஆலோசனை செய்ய அதிகாரிகள் கூட்டம், தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் அமைச்சர் க. இராசாராம் தலைமையில் நடைபெற்றது.

கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய விவசாய மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது பற்றிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது; அதன் பிறகு அமைச்சர் இராசாராம் நிருபர்களிடம் கூறியதாவது:-

''தஞ்சை மாவட்டத்தில் கிராமங்களிலும் மற்ற இடங்களிலும் உள்ள விவசாயிகளுக்கும் பட்டா வழங்குவது பற்றிச் சட்டங்கள் செய்ய இரத்தப் புரட்சியினால்தான் முடியும் என்று சில கட்சிகள் நம்பியிருந்தன; ஆனால் எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் குடியிருப்பு மனைப் பட்டா வழங்க அரசு சட்டம் செய்து வழங்கி வருகிறது.

அதேபோல், நிலமற்ற விவசாயிகளுக்கு வீடு கட்டிக் குடியிருப்பு வழங்கத் தமிழக அரசு தஞ்சை மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறது; அதற்கான வேலைகள் விரைவாகச் செயல்பட்டு வருகின்றன.

தஞ்சை மாவட்டத்திலுள்ளஎல்லா ஏழை எளிய வீடற்ற மக்களுக்கு இந்தத் திட்டம் பயன் தரும் வகையில் வேகமாகச் செயல்பட அதிகாரிகளுடன் கலந்து பேசப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் 1,78,061 ஏழை விவசாயிகள் இந்தத் திட்டத்தினால் முதலில் பயனடைகிறார்கள்; அவர்களுக்கு விரைவில் பட்டா வழங்கப்பட இருக்கிறது.

மற்ற வீடு--மனையற்ற ஏழைகள் எத்தனை பேர் என்பதை உடனடியாக அதிகாரிகள் தஞ்சை மாவட்டம் முழுவதும் சுற்றிக் கணக்கெடுப்பார்கள்.

இந்தத் திட்டத்துக்கு மட்டும் ஏறத்தாழ ரூ. 4 கோடி செலவிடப்படும் என்று நம்பப்படுகிறது.

தமிழகக் குடியிருப்புச் சட்டத்தை முதல்வர் கலைஞர் மாநிலம் முழுவதும் கொண்டுவரப் போகிறார்; வீடு கட்டும் திட்டத்தில் தஞ்சை மாவட்டம் முன்னோடி மாவட்டமாக விளங்குகிறது.''

(6 ம் பத்தித் தொடர்ச்சி)

யும் செயல்படுத்துமாறு கோருகிறது.

கரூரை மையமாக வைத்து ஒரு தனி அதிகாரி நியமித்து அடிக்கடி டிசைன்கள் மாற்றும்பொழுதெல்லாம் வேலைப் பளுவிற்கேற்ற கூலி கிடைக்கத் தக்கவாறு கண்காணிக்கவும், இதனால் ஏற்படும் தகராறுகளில் உடனுக்குடன் தீர்வு காணப்படவும் ஆவன செய்யுமாறு கோருகிறது.

கைத்தறி முதலாளிகள், மாஸ்டர் வீவர்கள் மூலம் உற்பத்தி மற்றும் தொழிலாளர் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதால், மாஸ்டர் வீவர்கள்--முதலாளிகள் என்ற குழப்பமின்றி உற்பத்தியாளர்கள் என்ற அடிப்படையில் தங்களிடம் நெய்யும் தொழிலாளர்களின் வருகைப் பதிவேடு வைத்துக் கொள்ளவும், ஊதியப் பட்டியல் வழங்கி அதில் தொழிலாளர்களிடம் கையெழுத்து வாங்கிடவும் சர்வீசுப் பட்டியல முறைப்படுத்தப்படவும், பாதிப்பு ஏற்படும் நாட்களுக்கு உரிய இழப்பு ஈடு வழங்கப்படவும் ஆவனசெய்யுமாறு கோருகிறது.

ஓடியெடுப்பு--பாவுப் பிணைப்புக் கூலிகளை உற்பத்தியாளரே ஏற்றுக்கொள்ள சட்டபூர்வமாக அரசு ஆவனசெய்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

விசைத் தறித் திணிப்பால் கரூர் பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் மிகப் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு விசைத் தறி பத்து தொழிலாளர்களைப் பாதிக்கின்றபடியால் இரட்டை முறுக்கு நூல் மூலம் விசைத் தறி உற்பத்தி செய்வதை முற்றிலும் தடுக்கவும், கைத்தறி முதலாளிகள் ஏராளமான கேஸ்மெண்ட் மேட்டி--பீஸ் ரகங்களை விசைத் தறியில் உற்பத்தி செய்து, 'கைத்தறித் துணி' என்று முத்திரையிட்டு அரசினை ஏமாற்றும் போக்கினை தடுத்திடவும் அரசினர் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறது.

ஆண்டு முழுவதும் தொழிலாளி வாங்கும் கூலியின் மொத்தத் தொகையில் குறைந்தபட்சம் ரூபாய்க்குப் பத்துக் காசுகள் போனசுத் தொகையை உற்பத்தியாளர்கள் வழங்குவதற்கு அரசு ஆவனசெய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கும் கிராசுடி—போனசு போன்ற பலன்களும், ஏனைய தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குக் கிடைத்துவருகின்ற இ. எஸ். ஐ, பிராவிடண்ட் பண்டு போன்ற வசதிகளும் கிடைப்பதற்கு ஆவனசெய்யுமாறு அரசினைரைக் கேட்டுக் கொள்கிறது.

கழகப் பாடகர் முகவரி

எம். ஜே. சையத் பாட்சா,
எண் 7, செரியன் நகர்,
புதுவண்ணை, சென்னை-81.

காமராசர் கல்லூரி சிண்டிகேட் மாணவர்களின் தரங்கெட்ட செயல்

வ. உ. சி. கல்லூரி விழாவில் காலணிகளை வீசிக் குழப்பம் விளைவிக்க முயற்சி

தூத்துக்குடி, செப். 5—

தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியின் வெள்ளி விழாவில், இரு பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்; இந்த விழாவை, இந்திரா காங்கிரசுத் தலைவர் வீரபாகு நடத்தினர்.

விழா நடைபெற்ற மேடைக்குப் பக்கத்தில், காமராசர் கல்லூரியைச் சேர்ந்த சிண்டிகேட் மாணவர்கள் சிலர் வந்து உட்கார்ந்து கொண்டனர்.

விழாவில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அந்த சிண்டிகேட் மாணவர்கள், தலைமையமைச்சர் — ஆளுநர் — மத்திய அமைச்சர்கள் — மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பலர் அமர்ந்திருந்த மேடைமீது செருப்புக்களை வீசினர்.

இதுபற்றிக் கவலைப்படாமல் முதலமைச்சர் பேசிக்கொண்டிருந்தார்; மீண்டும் அந்த மாணவர்கள் அமளி ஏற்படுத்த முனைந்தனர்.

முதலமைச்சர் தொடர்ந்து பேசுகையில், 'நாங்கள் காட்டும் அமைதியைக் கோழைத்தனம் என்று நினைத்துவிடாதீர்கள்' என்றார்.

இந்தநேரத்தில், பொதுமக்களில் பலர் மேடைக்கு முன்னே வந்து அந்த சிண்டிகேட் மாணவர்களை தூக்கிக்கொண்டு சென்று வெளியில் விட்டனர்; பின்னர், கூட்டத்தில் அமைதி நிலவியது.

விழாவில் முதல்வர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வீரத்திற்கும் — தியாகத்திற்கும் பெயர் பெற்ற நெல்லை மாவட்டத்தில் பிறந்த வ. உ. சிதம்பரனாரின் பெயரால் இக்கல்லூரி திகழ்கிறது.

வ. உ. சி. அவர்கள் இளமைக் காலத்தில் எப்படி எப்படி வாழ்ந்தார் — எப்படி எப்படிப் பயின்றார் என்பதை இந்த இளைய தலைமுறை அறிந்துகொள்வது நல்லது.

வ. உ. சிதம்பரனாரின் புகழை— பெருமையை— கீர்த்தியை நிலை நாட்டும் விதத்தில் இந்தியத் தலைமையமைச்சரை அழைத்து இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

தமிழர்கள் எப்படிப்பட்ட பண்பாட்டோடு வாழ்ந்தார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக வ. உ. சி. திகழ்ந்தார்.

அவர் வாழ்ந்த பூமியில் அவருக்குச் சிலை வைக்கவேண்டும்; இந்த ஆசை நிறைவேறுகின்ற வகையில் செப். 5-ம் நாள் தலைமையமைச்சர் இங்கு வந்து சிலையைத் திறக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தோம்; அந்த வேண்டுகோளை அவர் ஏற்றுக்கொண்டார்.

தலைமையமைச்சரின் வருகையையொட்டி, ஏ. பி. சி. வீரபாகு ஒரு நினைவுச் சின்னத்தை அமைத்திருக்கிறார்; 1947-ம் ஆண்டிலேயே இக்கல்லூரி துவங்க முயற்சிகள் எடுக்கப்பட்டதால் இந்த விழா வெள்ளி விழாவாக நடத்தப்படுகிறது.

வ. உ. சி. பிறந்த இந்த மண்ணுக்குப் பெருமை தேடித் தரவேண்டியது உங்கள் கடமையாகும்.

மிகச் சிறப்பாக இந்த விழா நடப்பதைப் பார்த்து மனம் பொறுக்காதவர்கள், இப்படிப்பட்ட நிலைமையைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

அமைதியாக இருப்பதை 'கோழைத்தனம்' என்று நினைத்து விடாதீர்கள்!

'இந்திரா காந்தி வந்திருக்கும் இந்த நேரத்தில், அவருக்கு அளிக்கப்படும் வரவேற்பு சிறப்பாக இருக்கக்கூடாது' என்னும் நினைப்பில் இங்கே சிலர் செய்யும் அமளிகள், திட்டமிட்டபடி நடத்தப்படுகின்றனவோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது!

'வெள்ளையரை விரட்ட விதை தூவியவரின் விழாவுக்குத் தலைமையமைச்சர் வருவதா — கவர்னர் வருவதா — அமைச்சர்கள் வருவதா — அனைவரும் ஒரே மேடையில் இருப்பதா — என்ற எரிச்சல் கொண்டோர் திட்டமிட்டுச் செய்யும் காரியம் இது! இப்படிப்பட்ட காரியங்களைத் தமிழர் சமுதாயம் சகித்துக் கொள்ளாது!"

சி. சுப்பிரமணியம்

சிண்டிகேட் மாணவர்கள் நடத்திய அமளி பற்றி மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டதாவது;—

"**இன்று நடைபெறுகின்ற இந்த விழா, கட்சிகளுக்கு அப்பாற்பட்டது; நமக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம் — கட்சி வேறுபாடு இருக்கலாம்; ஆனால், ஒரு தமிழருக்கு-ஒரு விடுதலை வீரருக்கு எடுக்கப்படும் விழா இது என்பதை உணர வேண்டும்.**

பண்பும் — அடக்கமும் — கட்டுப்பாடும் இல்லாமல் நாடு முன்னேற முடியாது.

இந்தக் காலத்து மாணவர்கள் சிறை செல்ல வேண்டாம்— செக்கிழுக்க வேண்டாம்—பண்பாட்டுடனும் — கட்டுப்பாட்டுடனும் நடந்து கொண்டாலே போதுமானதாகும்."

இந்திரா காந்தி

தலைமையமைச்சர் இந்திரா காந்தி பேசுகையில், வ. உ. சி. யின் நாட்டுப் பணிகளைப் பாராட்டினார்; 'தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல — இந்தியா முழுவதற்குமே அவர் ஒரு பெருமகன்; விவேகமும் நடைமுறை அறிவும் கொண்டவர்; இளைஞர்கள் அனைவரும் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டியவர்' என்று குறிப்பிட்டார்; தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:—

"நாம் அரசியல் ரீதியாகச் சுதந்தரம் பெற்று விட்டோம்; ஆனால், பொருளாதாரச் சுதந்தரம் இன்னமும் பெறவில்லை; ஏழ்மையும் வறுமையும், சம அளவுக்குப் படிப்பு — உணவு வசதி இல்லாத நிலைமையும் இன்னமும் நீடிக்கிறது. இந்த அவல நிலையைப் போக்குவதற்கான போராட்டத்தில் நாம் தொடர்ந்து ஈடுபடுவோம்.

"நாம் ஈடுபட்டுள்ள பணி மிகவும் கடினமானது; எந்த ஒற்றுமை உணர்ச்சி நம்மையெல்லாம் ஒன்றுபடுத்தி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான மாபெரும் சக்தியைத் தூண்டி விட்டதோ அதே ஒற்றுமை இன்று இருக்கிறது என்றாலும், சில நேரங்களில், அத்தகைய ஒற்றுமை உணர்வு இல்லையோ' என்று சிந்திக்க வேண்டிய நிலை தோன்றுகிறது; அதுபோன்ற நிலை ஏற்படாமல் ஒற்றுமை உணர்ச்சியைக் காப்பாற்ற வேண்டும்."

க. இராசாராம்

இந்த விழாவில், நூலகக் கட்டிடத்திற்கு அமைச்சர் க. இராசாராம் அடிக்கல் நாட்டிப் பேசுகையில், 'தென்னாட்டுத் திலகராக வ. உ. சி. திகழ்ந்தார்' என்று குறிப்பிட்டு, அவரது பணிகளைப் பற்றி எடுத்துரைத்தார்.

டாக்டர் மு. வரதராசனார்

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனார் பேசுகையில், 'மாணவர்கள் கடினமாக உழைக்கும் மனப்பக்குவத்தைப் பெறவேண்டும்; உலக முன்னேற்றத்திற்கு ஏற்ப ஆராய்ச்சிகளில் ஈடுபட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

ஆளுநர் கே. கே. ஷா

ஆளுநர் கே. கே. ஷா தமிழிலேயே பேசுகையில், 'இந்தச் சிறப்பு விழாவிற்கு என்னை அழைத்ததற்காகப் பெருமைப் படுகிறேன்; நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

வ.உ.சி. கண்ட கனவு நனவாகிறது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லமைச்சர் கலைஞர் அவர்களிடம் அளித்தார்; மற்றொன்றை — வ. உ. சி.-யின் மூத்த மகன் ஆறுமுகம் பிள்ளையிடம் அளித்தார்.

தலைமையமைச்சர் இந்திரா

வ. உ. சி. அஞ்சல் தலையை வெளியிட்டு தலைமையமைச்சர் இந்திரா காந்தி பேசியதாவது:—

" இளைஞர் சமுதாயத்திற்கு வழிகாட்டியாக விளங்குபவர் வ. உ. சிதம்பரனார்; அவரது நினைவாக அஞ்சல் தலை வெளியிடுவது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

தேச பக்தர் சிதம்பரனார்; இந்தியாவின் மிகச் சிறந்த தவப் புதல்வர்களில் ஒருவர்; அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் கப்பல் கம்பெனி அமைத்து — சுதேசிக் கப்பலை இந்தியக் கடலில் அவர் மிதக்க விட்டார்; அவர் தமது வாழ்நாளில் கண்ட கனவுகள் எல்லாம் இன்றைக்கு நிறைவேறத்தக்க வகையில் நாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது."

ஆந்திர மாநில தி. மு. க.

தலைமைக் கழக அறிவிப்பு

ஆந்திர மாநில தி. மு. க. அமைப்பாளராக முறைப்படி பணியாற்றி வரும் தோழர் கே. ஜி. முருகேசன அவர்களுக்குத் தெரியாமல் கழக விதிமுறைகளுக்கு மாறாகவும் — கட்டுப்பாட்டை மீறும் வகையிலும், ஆந்திர மாநில தி. மு. க. அமைப்பின் பிரதிநிதிகள் கூட்டத்தை 10—9—72 ஞாயிறன்று அவைத் தலைவர் தோழர் சி. கே. இராமசாமி அவர்கள் தன்னிச்சையாக அறிவிப்பு கொடுத்துக் கூட்டியிருப்பதாகத் தலைமைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது; இது, கழக விதிமுறைகளுக்கு மாறானதும்—நிர்வாக நடைமுறைக்குப் புறம்பானதுமாகும்.

அதுமட்டுமல்லாமல், தலைமைக் கழகத்தின் தாள்களைப் போல— உறுப்பினர் சேர்க்கும் தாள்களைச் சிலர் அச்சிட்டு, ஆந்திர மாநில அமைப்புகளிடையில் வழங்கிவருவதாகவும் தெரியவருகிறது; ஆந்திர மாநில அமைப்பாளர் அல்லது தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோரிடமிருந்தே தலைமைக் கழகம் அச்சிட்டு அனுப்பியுள்ள உறுப்பினர் பதிவுத் தாள்களைப் பெற்று முறைப்படி உறுப்பினர்கள் பதிவு செய்து அனுப்பப்பட வேண்டும் என்பதை இதன்மூலம் ஆந்திர மாநில கழக அமைப்புகளின் நிர்வாகிகளுக்குத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாநில அமைப்பாளருக்குத் தெரியாமல் பிரதிநிதிகள் கூட்டத்தைக் கூட்டுவதும், தானாகவே உறுப்பினர் பதிவுத் தாள்களை அச்சிட்டுஆங்காங்கு வழங்குவதுமான வரம்புமீறிய செயல்களில் ஈடுபட்டுள்ள தோழர்கள், தாங்கள் மேற்கொண்டுள்ள முறையற்ற செயல்களைக் கைவிடுமாறு தெரிவித்துக் கொள்வதுடன், இத்தகையோர் செயல்களுக்கு எத்தகைய ஆதரவும் அளிக்க வேண்டாம் என்றும் ஆந்திர மாநில அமைப்புகளையும் தோழர்களையும் தலைமைக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

அறிவகம்', சென்னை-13
6—9—1972

என். வி. நடராசன்,
துணைப் பொதுச் செயலாளர் தி. மு. க.

திருமண அழைப்பு

அன்புமிக்கீர்,

வணக்கம்; நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2004 ஆவணித் திங்கள் 23-ஆம் நாள் (8-9-72) வெள்ளிக்கிழமை காலை 9-மணி அளவில் —

எனது மகள் திருவளர் செல்வி: டாக்டர் மணமல்லியும்—
திருவளர் செல்வன்: டாக்டர் பு. பா. சிவராமன் அவர்களும்
(நலத்துறை இயக்குநர் டாக்டர் பு.ரா. பாலகிருஷ்ணன் அவர்களின் மகன்)

இசைவுடன் இல்லறம் ஏற்கும் இனிய திருமண விழா சென்னை—மயிலை எட்வர்ட் எலியட்ஸ் சாலை ஏவி.எம். இராசேசுவரி திருமண மண்டபத்தில் —

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர்

திரு. மு. கருணாநிதி

அவர்கள் சீரிய தலைமையில் நிகழும்.

மாண்புமிகு டாக்டர் நாவலர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்களும் தகைசால் பெருமக்கள் பலரும் வாழ்த்துரை வழங்குவர்.

தாங்கள் தமருடன் வருகை தந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்திட — எனது தந்தையார் உயர்திரு. மு. கல்யாண சுந்தரனார் அவர்களும் நானும் அன்புடன் விழைகின்றோம்.

அன்பன்,
க. அன்பழகன்
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

காஞ்சி வட்டத் தி. மு. க- கூட்டம்

காஞ்சி வட்ட தி. மு. க. செயலாளர்கள் — பிரதிநிதிகள் கூட்டம், 8—9—72 பிற்பகல் 2-மணிக்கு காஞ்சி செங்கழுநீர் ஓடைத் தெரு துலாலர் சத்திரத்தில் நடைபெறும்; வட்டக் கழக உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் டி. சீனிவாசன் கேட்டுக்கொள்கிறார்.

இந்தியக் கடல் வாணிபத்தின் தந்தை சிதம்பரனார்

முதல்வர் கலைஞர் புகழாரம்

முதல்வர் கலைஞர் அவர்கள் ஆங்கிலத்தில் உரையாற்றுகையில் கூறியதாவது:—

"நெடுங்காலத்துக்கு முன் 1906-ம் ஆண்டிலேயே கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் வாழ்ந்த மண் இது; தீர்க்க தரிசனமிக்க வழக்குரைஞராக — தொழிலாளர் தலைவராக — சுதேசியவாதியாக — தேசியத் தலைவர்களில் ஒருவராக இனி நீண்ட நெடுங்காலம் அவர் நினைவு கூரப்படுவார்.

"இந்தியக் கடல் வாணிபத்தின் உண்மையான தந்தை சிதம்பரனார் அவர்களேயாவார்" எனலாம்; தூத்துக்குடியிலிருந்து இலங்கைவரை அந்தக் காலத்திலேயே கப்பல் விட்டவர் அவர்!

விடுதலைக் கிளர்ச்சியில் தீவிரப் பங்கேற்ற சிதம்பரனார், தொழிலாளர்களுக்காகவும் பாடுபட்டார்.

சிதம்பரனாரைச் சிறைப்பிடித்த வெள்ளையரால் அவருக்கு 40 ஆண்டுக்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது; மேல் முறையீட்டின் பேரில் அது 6 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.

கோவைச்சிறையில் சிதம்பரனார் இழுத்த செக்கு சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லதோர் இடத்தில் அது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

சிதம்பரனார் சிறை வாழ்வை அனுபவித்தகாலத்தில், திருக்குறளுக்கும் — தொல்காப்பியத்துக்கும் உரை எழுதினார், அவை சிறப்பான தமிழ் இலக்கியங்களாகும்."

தமிழ்நாடு அஞ்சல் துறை உயர் அதிகாரி தபாளந்தம் நன்றி கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]